காரைக்கால் பஸ் நிலையம் அருகில் உள்ள கோவில்பத்து புது தெரு பகுதியை சேர்ந்த வர் மணிகண்டன் (வயது 30). கட்டிட தொழிலாளி. கடந்த 8-ந்தேதி அதிகாலை அவரது வீட்டில் மர்மநபர்கள் பெட்ரோல் குண்டு வீசினர்.

அது வீட்டின் முன்பு விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதனால் வீட்டில் தூங்கி கொண்டிருந்த மணிகண்டன் மற்றும் குடும்பத்தினர் வெளியே ஓடி வந்து பார்த்தனர். அதற்குள் மர்மநபர்கள் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

போலீசார் விசாரணை

இதுகுறித்து காரைக்கால் நகர போலீசில் மணிகண்டன் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, சம்பவம் நடந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். அதில் மர்மநபர் ஒருவர், பெட்ரோல் நிரப்பிய பாட்டிலில் தீயை பற்ற வைத்து வீட்டின் மீது வீசி விட்டு செல்வது போன்று காட்சி பதிவாகி இருந்தது.

அதன் அடிப்படையில் போலீசார் நடத்திய விசாரணையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கோவில்பத்து ஒமக்குளம் பகுதியை சேர்ந்த சந்திரசேகர் (53) ஒருவருடன் ஏற்பட்ட தகராறில் மணிகண்டன் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது தெரிய வந்தது.

2 பேர் கைது

இந்த சம்பவத்தில் சந்திர சேகர் மற்றும் அவரது நண்பர் ஆற்றங்கரை தெருவை சேர்ந்த லாரன்ஸ் (32) ஆகியோரை நேற்று போலீசார் கைது செய்தனர்.



பெட்ரோல் குண்டு வீசியதாக போலீசாரால் கைது செய்யப்பட்டவர்களை படத்தில் காணலாம்.

மதுபோதையில் தாறுமாறாக பள்ளி வாகனம் ஓட்டிய டிரைவர்

மடக்கி பிடித்த போலீசுக்கு பாராட்டு

புதுச்சேரி, ஜூன். 22-

புதுச்சேரியில் தனியார் பள்ளி மாணவ, மாணவிகளை ஆட்டோ, வேன் மற்றும் பஸ்களில் ஏற்றி செல்லும் வாகனங்கள் மூலம் பெற்றோர் பள்ளிக்கு அனுப்பி வைக்கின்றனர். தேற்று மாலை 3.30 மணிக்கு, உப்பளம் ராஜீவ் காந்தி சிக்னல் அருகே இருந்து 10க்கும் மேற்பட்ட மாணவர்களை ஏற்றி வந்த ஆட்டோ ஒன்று முன்னால் சென்ற வாகனம் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. இதில் ஆட்டோவில் இருந்த மாணவர்கள் காயமடைந்தனர்.

இதை பார்த்துவிட்டு அந்த வழியாக வந்த போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜன் தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். மாணவர்கள் ஏறி சென்ற வாகனம் தாறுமாறாக சென்றதை கண்டார். அந்த வாகனத்தை தனது இருசக்கர வாகனம் மூலம் துரத்தி சென்று மடக்கி பிடித்தார். அதில் இருந்த டிரைவரை கீழே இறக்கி விசாரித்தார். அவர் மது போதையில் இருந்தது தெரியவந்தது.

அவரை, போலீஸ் நிலையம் அழைத்து சென்று பிரித் அலைஸர் மூலம் சோதனை செய்தனர். அதில், 298 எம்.ஜி., அளவுக்கு மதுபோதை என காண்பித்தது.

போக்குவரத்து காவல் பயிற்சி மூலம் டாடா மேஜிக் வாகனம் இயக்கி, மாணவர்களை அவர்களின் வீடு வரை கொண்டு விட்டனர்.

டிரைவர் ஆனந்தவேலு மீது அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டுதல், போதையில் வாகனம் ஓட்டுதல் ஆகிய பிரிவின் கீழ் வழக்கு போக்குவரத்து போலீசார் வழக்கு பதிந்து, வாகனத்தை பறிமுதல் செய்தனர்.

போக்குவரத்து போலீசாரின் இந்த செயலை, பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டுகள் பாராட்டினர்.



சோனாம்பாளையம் சந்திப்பு அருகே மதுபோதையில் பள்ளி வாகனம் ஓட்டிச் சென்ற டிரைவர் ஆனந்தவேலுவை இன்ஸ்பெக்டர் நாகராஜன் பிடித்து காவல் நிலையம் அழைத்து சென்றார்.



சாலை பாதுகாப்பு வாரம் விழிப்புணர்வு போட்டி

புதுச்சேரியில் தேசிய சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு போக்குவரத்து போலீஸ் சார்பில் பெத்தி செமினார் பள்ளியில் நடந்த ஓவியம், கட்டுரை போட்டியை சீனியர் எஸ்.பி., பிரவீன்குமார் திரிபாதி துவக்கி வைத்து பார்வையிட்டார்.

புதுச்சேரி, ஜூ. 1- வரும் சீனியர் எஸ்.பி., காப்பு தொடர்பான கட்டுரை போட்டியில் பிரவீன்குமார் திரிபாதி தூரை போட்டியில் 12 ஆம் வகுப்பு மாணவர்களும் தலைமை தாங்கி, துவக்கி கல்லூரி மாணவர்களும் ஓவியப் போட்டியில் 10 வைத்தார். ஓவியப் போட்டியில் 12 போக்குவரத்து எஸ்.பி., பள்ளி மாணவர்களும் சார்பில் தேசிய சாலை

லோன் ஆப் மூலம் ரூ.650 கோடி மோசடி வழக்கில் பெங்களூரு வாலிபர் கைது



புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் அதிரடி

புதிய 3 குற்றவியல் சட்டங்கள் குறித்து ஆலோசனை கூட்டம்

காவல்துறை அதிகாரிகள் மீது வரும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது



புதுச்சேரியில் 3 புதிய குற்றவியல் சட்டங்களை செயல்படுத்துவது குறித்து மதிப்பிடுவதற்காக, காவல்துறை அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் மறுஆய்வுக்கூட்டம் நடந்தது.

அமைச்சர் நமச்சிவாயம் பேட்டி

புதுச்சேரி, ஜூன் 6: புதுச்சேரியில் 3 புதிய குற்றவியல் சட்டங்களை செயல்படுத்துவது குறித்து மதிப்பிடுவதற்காக, காவல்துறை அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் ஒரு மறுஆய்வுக்கூட்டம் நடத்தினார். இதில் டிஜிபி ஷாலினி சிங், ஐஜி அஜித் குமார் சிங்லா, சீனியர் எஸ்.பி. கலைவாணன், அனைத்து பிரிவு எஸ்பிக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் காவல் துறை, நிறைச்சாலைகள், நீதிமன்றங்கள், வழக்கு தொடர்தல் மற்றும் தடயவியல் சேவைகள் தொடர்பான முக்கிய விதிகளின் முன்னேற்றம் மற்றும் நிலை குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

மேலும், கைது செய்யப்பட்ட அனைத்து குற்றவாளிகளின் கைரேகைகளும் தேசிய தானியங்கி கைரேகை அடையாள அமைப்பில் ஏற்ற பதிவு செய்யப்பட வேண்டும். இதனால் தரவுத்தளத்தை நிறைந்த முறையில் பயன்படுத்த முடியும். எந்தவொரு வழக்கிலும் சட்ட ஆலோசனை வழங்க, வழக்கு தொடரும் அதிகாரிக்கு மட்டுமே உரிமை இருக்க வேண்டும். மின்னணு சம்மன்கள், மின்னணு சாக்ஷியா, நியாய சுருதி மற்றும் தடயவியல் போன்ற விதிகள் விரைவில் முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று உள்துறை அமைச்சர் அறிவுறுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் நமச்சிவாயம் நிருபர்களிடம் கூறியதாவது, கடந்த மாதம் 1ம் தேதி முதல் உள்துறை அமைச்சர் அமித்ஷா புதிய 3 சட்டங்கள் சம்பந்தமாக புதுச்சேரி மாநிலத்தில் செயல்பாடுகள் சம்பந்தமாக கவர்னர், உள்துறை அமைச்சராகிய நான், தலைமை செயலர், சட்டத்துறை செயலர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அதன் அடிப்படையில் ஒவ்வொரு எஸ்பஆர் பதியும் போது அந்தந்த மாநில மொழியில் பதிய வேண்டும் என்று சொல்லி இருந்தார். ஒவ்வொரு வாரமும் புதிய சட்டங்கள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து டிஜிபி ஆய்வு செய்ய வேண்டும்.

அதன்பிறகு புதுச்சேரி உள்துறை அமைச்சர் 15 நாட்களுக்கு ஒரு முறையும், கவர்னர் மாதத்துக்கு ஒரு முறையும் புதிய குற்றவியல் சட்டங்கள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கூட்டம் நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இன்று முதல் கூட்டம் (நேற்று) நடந்தது. இதில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் அறிவுறுத்தியது என்பது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. எந்த காலக்கெடுவுக்குள் காவல்துறை செய்து முடிக்கப்படும் என்பதையும் இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மக்களுக்கு வெகு விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு, போதைப்பொருள், காவல் துறை மீதான புகார்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

காவல்துறை அதிகாரிகள் மீது வரும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தவளக்குப்பம் காவல் நிலைய அதிகாரி மீது விசாரணை நடத்தப்படுகிறது. விசாரணை முடிந்ததும் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் மன்றத்தில் நிறைய பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது. சில பிரச்சனைகள் சட்டத்திருத்தங்கள், வழக்கின் தன்மை குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லா பிரச்சனைகளுக்கும் மக்கள் மன்றத்தில் தீர்வு காண முடியாது.

இனி வரும் காலங்களில் மக்கள் மன்றங்களில் வரும் புகார்கள் குறித்தும் ஆலோசனை செய்யப்படும். தொடர் வெடிகுண்டு மிரட்டல், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மெயில் மூலம் வருகிறது. மத்திய அரசின் உதவியை கேட்டுள்ளோம். அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கான தீர்வு விரைவில் கிடைக்கும் என்றார்.

திருக்கனூர் அருகே கை துண்டாகி கிடந்த சம்பவம்:

வாலிபரை கொன்று புதருக்குள் உடல் வீச்சு

கைதான 2 பேர் பரபரப்பு வாக்குமூலம்

திருக்கனூர், ஜூன் 18- திருக்கனூர் அருகே கை துண்டாகி கிடந்த சம்பவத்தில் வாலிபர் கொன்று உடல் புதருக்குள் வீசப்பட்டது தெரியவந்தது. இதுதொடர்பாக கைதான 2 பேர் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

போலீஸ் பார்த்து ஓட்டம்

திருக்கனூர் அருகே உள்ள கொமணவெளி பகுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு இரவில் திருக்கனூர் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். போலீசாரை பார்த்ததும் அங்கு நின்று கொண்டிருந்த 2 பேர் மோட்டார் சைக்கிளை போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர்.

இதனால் சந்தேகமடைந்த போலீசார் அவர்களை துரத்திப் பிடிக்க முயன்றனர். ஆனால் அந்தஇரண்டு பேரும் தப்பி முடிவிட்டனர். இதையடுத்து போலீசார் மோட்டார் சைக்கிளை கைப்பற்றி விசாரித்தனர். அதில் கொமணவெளி பகுதியை சேர்ந்த ஆதிநாராயணன் என்பவருக்கு சொந்தமானது என்பது தெரியவந்தது.

துப்பு துலங்கியது

தொடர்ந்து தப்பியோடிய நபர்கள் குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். இதில் காலை அதே பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததில் துப்புதுலங்கியது. அப்போது திருக்கனூர் அருகே உள்ள தமிழக பகுதியான வடக்கு பாளையம் பகுதியை சேர்ந்த ரோகித் (வயது 20), எஸ்.ஆண்டிப்பாளையத்தை சேர்ந்த பாபு என்ற தட்சிணாமூர்த்தி (20) ஆகியோர் தான் அவர்கள் என்பது தெரியவந்தது.

போலீஸ் விசாரணையில் அவர்கள், வாலிபர் ஒருவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்து உடலை பெரியபாஞ்சாலி முதிரம் பகுதியில் வயல்வெளியில் வீசிவிட்டு உடல் மீது செடி, கொடிகளை போட்டு மறைத்து வைத்ததாக தெரிவித்தனர். இதைதொடர்ந்து அவர்களை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் கொலை செய்யப்பட்ட வாலிபர் திருக்கனூர் அருகே செல்லிப்பட்டு மெயின் ரோடு பகுதியை சேர்ந்த மணி என்பவரின் மகன் ஆதிநாராயணன் (வயது 28) என்பது தெரியவந்தது.



வாலிபரை கொன்று உடலை மறைத்து வைத்த இடத்தை கொலையாளிகள் அடையாளம் காட்டும் காட்சி.

புதரில் கிடந்த உடல்

கொலை நடந்தது, உடல் மறைத்து வைத்த இடம் மற்றும் கொலை செய்ய பயன்படுத்திய ஆயுதம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது அந்த மோட்டார் சைக்கிளை இருவரும் சேர்ந்து திருடியதாகவும், அதனை பார்த்த ஆதிநாராயணன் தட்டிக் கேட்டதால் அவரை கொலை செய்ததாகவும் தெரிவித்தனர். இதையடுத்து திருக்கனூர் போலீசார் மற்றும் கண்டமங்கலம் அணை போலீஸ் சூப்பிரண்டு இளங்கோவன் மேற்பார்வையில் திருக்கனூர் இன்ஸ்பெக்டர் பாண்டியன் ஆகியோர் கொண்ட 2 தனிப்படை போலீசார் விசாரணை நடத்தினர். பின்னர் அவர்கள் உடல் மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டினர்.

தொடர்ந்து புதரில் இடந்த ஆதிநாராயணனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு முன்டியம்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு போலீசார் அனுப்பி வைத்தனர்.

கொலைக்கான காரணம் குறித்து 2 பேரும் வாக்குமூலம் அளித்ததாக போலீசார் கூறினர்.

மோட்டார் சைக்கிளை எரிய விட்ட நபர

பாபுவும், ரோகித்தும் பெரியபாபு சமுத்திரம் பகுதியில் உள்ள ஒரு செய்கல் சூளை அருகே மோட்டார் சைக்கிளை சாலையோரம் நிறுத்திவிட்டு மது குடித்துள்ளனர். அப்போது குடிபோதையில் நடந்து வந்த ஆதிநாராயணன் சாலை ஓரத்தில் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளை ஏறி அமர்ந்து கைப்பிடித்து இருக்கியுள்ளார். இதை பார்த்த ரோகித்தும், பாபுவும் மோட்டார் சைக்கிளில் ஏன் கைப்பிடிக்கிறாய் என்று கேட்டுள்ளனர். இதில் இருதரப்பினருக்கும் வாய்தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த ஆதிநாராயணன் அவர்களை பேரையும் தாக்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த 2 பேரும், செல்லாமல் சுற்றுவட்டாரங்களை சுற்றி வந்து ஆதிநாராயணனை சரமாரியாக வெட்டினர். இதில் ஒருகையும் தனியாக துண்டாகி விழுந்துள்ளது. இதை பார்த்த ரோகித் அலறியடித்து ஓடினர். இதில் ஆதிநாராயணன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

உடனே உடலை அவர்கள் அருகில் உள்ள வில்வராயனேரி பகுதியில் வீசி செட்டு, கொலைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை தனியாக தூக்கி வீசி விட்டு மறைத்து வைத்துள்ளனர். இதைதொடர்ந்து ஆதிநாராயணனின் உடல் மீது வரும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தவளக்குப்பம் காவல் நிலைய அதிகாரி மீது விசாரணை நடத்தப்படுகிறது. விசாரணை முடிந்ததும் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் மன்றத்தில் நிறைய பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது. சில பிரச்சனைகள் சட்டத்திருத்தங்கள், வழக்கின் தன்மை குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லா பிரச்சனைகளுக்கும் மக்கள் மன்றத்தில் தீர்வு காண முடியாது.

இனி வரும் காலங்களில் மக்கள் மன்றங்களில் வரும் புகார்கள் குறித்தும் ஆலோசனை செய்யப்படும். தொடர் வெடிகுண்டு மிரட்டல், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மெயில் மூலம் வருகிறது. மத்திய அரசின் உதவியை கேட்டுள்ளோம். அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கான தீர்வு விரைவில் கிடைக்கும் என்றார்.

ஜீப்ரா கிராசிங் அமைக்கும் பணியில் போக்குவரத்து போலீசார்



பாகூர் அருகே பாதசாரிகள் சாலையை கடக்கும் வகையில், ஜீப்ரா கிராசிங் லைன் அமைக்கும் பணியில் போக்குவரத்து போலீசார் ஈடுபட்டனர்.

பாகூர், மே 16: புதுச்சேரி - கடலூர் தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்த சாலையாக உள்ளது. இச்சாலை பொதுப் பணித்துறை தேசிய நெடுஞ்சாலை பிரிவின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இந்த சாலையில், பாதுகாப்பு அம்சங்கள் குறைபாடு காரணமாக விபத்துக்கள் நடைபெற்று வருகிறது. விபத்துக்களை தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை, புதுச்சேரி மாநிலம் பாகூர் அடுத்த தெற்கு போக்குவரத்து போலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால், பொதுப்பணித் துறையின் ஒத்துழைப்பு முறையாக இல்லாத நிலையில், இன்ஸ்பெக்டர் தன்வந்திரி உத்தரவின் பேரில், அரியாங்குப்பம் முதல் முள்ளோடை வரை உள்ள பேருந்து நிறுத்தத்தில் பாதசாரிகள் சாலையை கடக்கும் வகையில், ஜீப்ரா கிராசிங் லைன் அமைக்கும் பணியில் போக்குவரத்து போலீசார் ஈடுபட்டனர். வாகன ஓட்டிகள் பாராட்டு தெரிவித்தனர்.

கோர்காடு அரசு பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி



கோர்காடு அரசு பள்ளியில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற சப் இன்ஸ்பெக்டருக்கு பள்ளி துணை முதல்வர் முரளி சால்வை அணிவித்தார்.



டி.ஐ.ஜி. சத்தியசுந்தரம், சீனியர் போலீஸ் சூப்பிரண்டு கலைவாணன் ஆகியோர் படகில் சென்று கடல் பகுதியை கண்காணித்த காட்சி.

கடலோர பகுதிகளில்

டி.ஐ.ஜி. தலைமையில் போலீசார் 'சாகர் கவாச்' பாதுகாப்பு ஒத்திகை

பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முயன்றவர் சிக்கினார்

புதுச்சேரி, ஜூன்.26- கடலோர பகுதிகளில் டி.ஐ.ஜி. தலைமையில் போலீசார் 'சாகர் கவாச்' பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர். மேலும் பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முயன்றவர்களை போலீசார் மடக்கி பிடித்தனர்.

பாதுகாப்பு ஒத்திகை

மும்பையில் கடந்த 2008-ம் ஆண்டு இயற்கை நடத்திய தாக்குதலுக்கு பிறகு, மத்திய அரசு கடலோர மாவட்டங்களில் 'சாகர் கவாச்' பாதுகாப்பு ஒத்திகையை ஆண்டுக்கு 2 முறை கடலோர பாதுகாப்பு போலீசார் நடத்தி வருகின்றனர்.

அதன்படி தமிழகம், புதுச்சேரி கடலோர பகுதிகளில் சட்டம்-ஒழுங்கு சீனியர் போலீஸ் சூப்பிரண்டு கலைவாணன், கடலோர காவல் படை போலீஸ் சூப்பிரண்டு புஷ்பவேலு, இன்ஸ்பெக்டர் வேலுசக்தி மற்றும் போலீசார் நேற்று காலை மீனவர் படகில் கடலில் சோதனை பணியில் ஈடுபட்டனர். இதில் கடலில் சந்தேகப்படும்படியாக நபர்கள் யாரும் கஞ்சித்தினிர்களா? என தொலைநோக்கியுமூலமாக பார்வையிட்டனர்.

அப்போது கடலில் மீன் பிடி தொழிலில் ஈடுபட்ட மீனவர்களிடம் அடையாள அட்டை கேட்டு போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். மேலும் மீனவர்களிடம், கடலில் சந்தேகப்படும்படியாக நபர்கள் வந்தால் உடனடியாக போலீசுக்கு தகவல் தெரிவிக்கும்படி அறிவுறுத்தினர்.

தமிழ்நாடு கமாண்டோ படைவீரர் பாலாஜி என்பவரை ஒத்திகைக்காக சென்றவர் காலாப்பட்டு போலீஸ் உதவி சப்-இன்ஸ்பெக்டர் பிரசாந்த் மற்றும் போலீசார் பிடித்தனர்.

இதேபோல் தேங்காய் திட்டு துறைமுக பகுதியில் கடல் வழியாக சுமார் 500 மீட்டர் தொலைவில் முகமூடி அணிந்த கமாண்டோ வீரர்கள் தரை, அருண் மற்றும் தமிழ்நாடு போலீஸ் கோஸ்தாஸ் ஆகியோர் புதுவை கடலோர காவல்படை போலீசாரிடம் சிக்கினார்.

இந்த சாகர் கவாச் பாதுகாப்பு ஒத்திகை இன்று (வியாழக்கிழமை) மாலை 6 மணி வரை நடக்கிறது.



போலீசார் பங்கேற்ற மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வு ஊர்வலத்தை அமைச்சர் திருமுருகன், சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்த காட்சி.

சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு

போலீசார் மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வு ஊர்வலம்

அமைச்சர் திருமுருகன் தொடங்கி வைத்தார்

காரைக்கால், ஜூன்.28- சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, மோட்டார் சைக்கிளில் போலீசார் நடத்திய விழிப்புணர்வு ஊர்வலத்தை அமைச்சர் திருமுருகன் தொடங்கி வைத்தார்.

மோட்டார் சைக்கிள் ஊர்வலம்

சர்வதேச போதை ஒழிப்பு தினத்தையொட்டி, காரைக்கால் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலக வாயிலில் போலீசார் பங்கேற்ற மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வு ஊர்வலம் தொடங்கியது.

இந்த ஊர்வலத்தை புதுச்சேரி குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமுருகன், மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். ஊர்வலத்தில் 60-க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் போலீசார் மாவட்ட முக்கிய சாலைகள் வழியாக சென்று, காரைக்கால் கடற்கரையில் நிறைவு பெற்றது. தொடர்ந்து, காரைக்கால் கடற்கரையில் போதை ஒழிப்பு இனத்திற்கான நிகழ்ச்சி நடைபெற்றது.

பரிசளிப்பு

அப்போது, போதை ஒழிப்பு இனத்திற்கான உறுதி மொழியினை அனைவரும் எடுத்துக்கொண்டனர். இதில் போலீஸ் சூப்பிரண்டு சுப்பிரமணியன், போக்குவரத்து காவல் நிலைய இன்ஸ்பெக்டர் லெனின் பாரதி மற்றும் பல்வேறு காவல் நிலைய இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், போலீசார் மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாணவர்களிடையே மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா பேசியதாவது:-

போதை பக்கம் செல்லாதே

போதை ஒழிப்பு இனத்திற்காக நடைபெற்ற ஓவியப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகளில் மாணவர்களாகிய நீங்கள் கலந்து கொண்டு சிறப்பாக தங்களது கலைத்திறமையை வெளிக்காட்டி இருக்கிறீர்கள். குறிப்பாக இந்த ஊர்வலம் மற்றும் இது போன்ற போட்டிகள் மாணவர்களிடையே நடத்தப்படுவது, இந்த வயதிலிருந்து போதையின் பக்கம் யாரும் செல்ல விடாமல் நடுப்பதற்காகத்தான்.

இக்காலத்தில் எளிதாக புதிய வடிவமாக பலவிதமான போதைப்பொருட்கள் உருவம் பெற்றுள்ளன. அது அனைத்தும் எளிதாக இவ்வயதில் கிடைத்து விடுகிறது. இதன் பக்கம் தாங்களும், சக நண்பர்களையும் செல்லவிடாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மேலும் காரைக்கால் மாவட்டத்தை போதைப்பொருட்கள் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு தாலும் சக காவலர்களும் பாதுகாத்து வருகிறோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

கஞ்சா விற்ற 4 பேர் கும்பல் அதிரடி கைது



தலைக்குப்பம் அருகே கஞ்சா விற்ற 4 வாலிபர்களை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து செய்யப்பட்ட வரக்கூடிய 100 கிராம் கஞ்சா, 2 செல்போன்களும் கைப்பற்றப்பட்டன.

100 கிராம் கஞ்சா, 2 செல்போன்கள் பறிமுதல்

தலைக்குப்பம் அருகே மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு கஞ்சா விற்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் தலைக்குப்பம் எல்லை பகுதியில் நேற்று மாலை கஞ்சா விற்பதாக சந்தேகத்தின் பேரில் 4 பேரை பிடித்து விசாரித்தனர். அப்போது அவர்கள் கஞ்சா விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டனர். இதையடுத்து அவர்களிடம் இருந்து 2 செல்போன்கள், 100 கிராம் கஞ்சா மற்றும் ரூ.1,000 பணம் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். இதையடுத்து 4 பேரையும் கைது செய்த போலீசார் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து, அவர்களை புதுச்சேரி தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி முன்பு ஆஜர்படுத்தினர். அதன்பேரில் நீதிபதி அவர்களை புதுச்சேரி மத்திய சிறையில் அடைத்தனர்.

பாதுகாப்பு ஏற்பாடு குறித்து போலீஸ் ஐ.ஜி. ஆலோசனை



நீட் தேர்வு தொடர்பாக போலீஸ் அதிகாரிகளுடன் போலீஸ் ஐ.ஜி. அமித் குமார் சிங்லா ஆலோசனை நடத்திய காட்சி.

புதுச்சேரியில் நாளை நடக்கும் நீட் தேர்வு தொடர்பாக போலீஸ் ஐ.ஜி. அமித்குமார் சிங்லா ஆலோசனை நடத்தினார்.

நீட் தேர்வு

இளநிலை மருத்துவக் கல்விக்கான 'நீட்' நுழைவு தேர்வு நாளை (ஞாயிற்றுக்கிழமை) நாடு முழுவதும் நடைபெற இருக்கிறது. இந்த தேர்வு புதுச்சேரி மாநிலத்தில் 12 தேர்வு மையங்களில் நடக்கிறது. இதில் மொத்தம் 5,230 மாணவர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

இதையொட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆலோசனை கூட்டம் நேற்று காவலர் சமுதாய நலக்கூடத்தில் நடந்தது.

கவனமாக செயல்பட வேண்டும்

கூட்டத்திற்கு போலீஸ் ஐ.ஜி. அமித் குமார் சின்லா தலைமை தாங்கி பேசுகையில், 'தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் கொண்டு வரும் போதும், தேர்வு முடிந்து பின்னர் விடைத்தாள்களை தேர்வு முகமைக்கு அனுப்பி வைக்கும் போதும் கவனத்தோடு செயல்பட வேண்டும். தேர்வு மையங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசார் விழிப்புணர்வு அடைந்து, கவனமாக செயல்பட வேண்டும்' என்றார்.

கூட்டத்தில் போலீஸ் டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம், போலீஸ் சூப்பிரண்டுகள் கலைவாணன், நாராயணன், பிரவீன் குமார் திரிபாதி மற்றும் நீட் தேர்வு

பெண்கள் பள்ளிகளில் போலீஸ் பாதுகாப்பு

மாணவிகளிடம் கிண்டல் செயல்களில் ஈடுபடுவதை தடுக்க



மணிமேகலை அரசு பெண்கள் பள்ளி முன்பு பெண் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம்.

புதுச்சேரி, ஜூன்.24- மாணவிகள் கிண்டல் செய்யப்படுவதை தடுக்க பெண்கள் பள்ளிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாணவிகளிடம் கிண்டல்

புதுவையில் பள்ளி, கல்லூரிகள் அருகே காலை, மாலை வேளைகளில் கூட்டம் அதிக அளவில் இருக்கும். குறிப்பிட்ட நேரத்தில், அதாவது காலையில் மாணவ, மாணவிகளை கொண்டுவந்து விடவும், மாலையில் வீட்டிற்கு அழைத்து செல்லவும் பெற்றோர்கள், உடன்பிறந்தவர்கள் வாகனங்களில் வந்து செல்வார்கள்.

இதனால் பள்ளி, கல்லூரி முன்பு போக்குவரத்து பாதிக்கப்பட்டு வந்தது. அதுமட்டுமின்றி பெண்கள் மட்டுமே படிக்கும் பள்ளி, கல்லூரி முன்பு இளைஞர்கள் கூடி மாணவிகளை கிண்டல் செய்யும் வந்தனர்.

போலீஸ் பாதுகாப்பு

இதுதொடர்பாக அரசுக்கும் புகார்கள் சென்றன. இதைத்தொடர்ந்து காலை, மாலை வேளைகளில் பெண்கள் படிக்கும் பள்ளி, கல்லூரி முன்பு போலீஸ் பாதுகாப்பு வழங்க உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து நேற்று பெண் பள்ளி, கல்லூரி முன்பு பெண் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.



சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் நடந்த மக்கள் மன்றத்தில் பொதுமக்கள் தவற விட்ட செல்போனை மீண்டும் அவர்களிடம் ஒப்படைத்த போது எடுத்த படம்.

குறை தீர்வு முகாமில்

ரூ.3½ லட்சம் செல்போன்கள் ஒப்படைப்பு

52 புகார்களுக்கு உடனடி தீர்வு

புதுச்சேரி, ஜூன் 29- புதுச்சேரியில் நடந்த மக்கள் மன்ற குறைதீர்வு முகாமில் 52 புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது. மேலும் ரூ.3½ லட்சம் செல்போன்கள் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறைதீர்வு முகாம்

புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து போலீஸ் நிலையங்களில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் மக்கள் மன்றம் என்ற பெயரில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடக்கிறது.

அதன் படி, நேற்று அலைகற்று போலீஸ் நிலையங்களில் மக்கள் மன்றம் முகாம் நடந்தது. ரெட்டியார்பாளையம் போலீஸ் நிலையத்தில் நடந்த நிகழ்ச்சியில் போலீஸ் டி.ஐ.ஜி சத்தியசுந்தரம் கலந்து கொண்டு பொதுமக்களிடம் நேரடியாக புகார்களை பெற்றார். அங்கு மட்டும் 10 புகார்கள் பெறப்பட்டன. இதில் சொத்து பிரச்சினை, வாடகை பிரச்சினை, நிலமோசடி, குடும்ப பிரச்சினை உள்ளிட்டவை தொடர்பான புகார் மனுக்கள் பெறப்பட்டன.

இதேபோல் காலாப்பட்டு போலீஸ் நிலையத்தில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு கலைவாணன் தலைமையிலும், வில்லியனூர் போலீஸ் நிலையத்தில் மேற்கு போலீஸ் சூப்பிரண்டு வம்சிதா தலைமையிலும், போக்குவரத்து போலீஸ் நிலையத்தில் போலீஸ் சூப்பிரண்டு செல்வம் தலைமையிலும் நடந்தது. இதில் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு போலீஸ் அதிகாரிகளிடம் தங்களின் புகார்களை தெரிவித்தனர்.

அரியாங்குப்பம் போலீஸ் நிலையத்தில் நடந்த மக்கள் மன்றத்தில் முதலியார் பேட்டை அரியாங்குப்பம், பாகூர் ஆகிய போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் கலந்து கொண்டு குறைகளை கேட்டனர். இதில் மோட்டார் சைக்கிள் வாங்கியதில் தகராறு, வீடு வாடகை விட்டதில் தகராறு உள்ளிட்ட 13 புகார்கள் பெறப்பட்டன.

52 புகார்களுக்கு தீர்வு

மேற்கு நடைபெற்ற மக்கள் மன்றத்தில் 60 பெண்கள் உட்பட 242 பேர் கலந்து கொண்டனர். இதில் 52 புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது. 98 புகார்கள் தெரிவித்தனர். மீதமுள்ள புகார்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூப்பிரண்டு விரவல்வளவன் மற்றும் போலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அரியாங்குப்பம்

இதேபோல் காலாப்பட்டு போலீஸ் நிலையத்தில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு கலைவாணன் தலைமையில் நடந்தது. மேலும் போக்குவரத்து போலீஸ் நிலையத்தில் போலீஸ் சூப்பிரண்டு செல்வம் தலைமையிலும் நடந்தது. இதில் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு போலீஸ் அதிகாரிகளிடம் தங்களின் புகார்களை தெரிவித்தனர்.

அரியாங்குப்பம் போலீஸ் நிலையத்தில் நடந்த மக்கள் மன்றத்தில் முதலியார் பேட்டை அரியாங்குப்பம், பாகூர் ஆகிய போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் கலந்து கொண்டு குறைகளை கேட்டனர். இதில் மோட்டார் சைக்கிள் வாங்கியதில் தகராறு, வீடு வாடகை விட்டதில் தகராறு உள்ளிட்ட 13 புகார்கள் பெறப்பட்டன.

52 புகார்களுக்கு தீர்வு

மேற்கு நடைபெற்ற மக்கள் மன்றத்தில் 60 பெண்கள் உட்பட 242 பேர் கலந்து கொண்டனர். இதில் 52 புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது. 98 புகார்கள் தெரிவித்தனர். மீதமுள்ள புகார்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுச்சேரி, காரைக்காலில்

106 ரவுடிகளின் வீடுகளில் போலீசார் அதிரடி சோதனை

ஆயுதச்சட்டத்தின் கீழ் 4 பேர் கைது

புதுச்சேரி, மே 4: புதுச்சேரி மற்றும் காரைக்காலில் நேற்று முன்தினம் அதிரடியாக 106 ரவுடிகளின் வீடுகளுக்கு சென்று போலீசார் அதிரடி சோதனை செய்தனர். இதில் 4 பேரை ஆயுதச்சட்டத்தின் கீழ் கைது செய்தனர். மேலும், 68 பேர் மீது பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஏற்படுத்தாதல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் குற்ற சம்பவங்களை குறைக்கவும், ரவுடிகளை ஒடுக்கவும் ஆபரேஷன் நிம்ரோஸ் 2.0 என்ற அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் காரணமாக ரவுடிகள் தொடர்ந்து குற்ற சம்பவங்களில் ஈடுபடாதவாறு கண்காணிக்கப்பட்டனர். இந்நிலையில் புதுச்சேரி எஸ்பி (தலைமையிடம்) பிரவீன்குமார் திரிபாதி உத்தரவின் பேரில் நேற்று அதிரடியாக ரவுடிகளின் வீடுகளில் சோதனை நடத்த 4 தனிப்படை போலீசார் அமைக்கப்பட்டனர். இதன்படி



போக்குவரத்திற்கு இடையூறாக சாலையில் நிற்கும் வாகனங்களை அப்புறப்படுத்த வாங்கப்பட்டுள்ள புதிய ரெக்கவரி வாகனங்களை படத்தில் காணலாம்.

போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு காண

புதுவை காவல்துறைக்கு ரூ.3 கோடியில் நவீன வாகனங்கள்



காவல்துறைக்கு வாங்கப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய கண்காணிப்பு கார்கள்.

புதுச்சேரி, மே.15- புதுச்சேரியில் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு காண ரூ.3 கோடியில் காவல்துறைக்கு நவீன வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து நெரிசல்

புதுச்சேரியில் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. குறிப்பாக வார விடுமுறை நாட்களில் வெளிமாநிலங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள். புதுச்சேரி நகருக்கு சாதாரண நாளில் சுமார் 1 லட்சம் வாகனங்களும், விடுமுறை நாட்களில் 3 லட்சத்திற்கும் அதிகமான வாகனங்களும் வந்து செல்வதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதிகபடியான வாகனங்களின் வருகையால் நகரில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. மேலும் போக்குவரத்து விதிமீறல்களும் அதிகரித்து வருகிறது. போக்குவரத்து பிரச்சினை என்பது போலீசாருக்கு பெரும் சவாலாக இருந்து வருகிறது.

நவீன வாகனங்கள்

இந்தநிலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் போக்குவரத்து போலீசார் ரோந்து செல்வதற்காக 11 நவீன மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இந்த மோட்டார் சைக்கிள்களில் போலீசார் ரோந்து சென்று போக்குவரத்துக்கு இடையூறாக நிற்கும் வாகனங்களை ஒழுங்குபடுத்துகின்றனர்.

தற்போது சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து சுமார் ரூ.3 கோடிக்கு கண்காணிப்பு வாகனம் -4, ரெக்கவரி வாகனம்- 6 ஆகியவை வாங்கப்பட்டு உள்ளன.

கண்காணிப்பு வாகனத்தில் 360 டிகிரி கேமரா, வாகனங்களின் வேகங்களை கணக்கீடும் கருவி, மது குடித்துவிட்டு வாகனம் ஓட்டினால் கண்டுபிடிக்கும் மூச்சு பகுப்பாய்வு கருவி, தீயணைப்பான் உள்ளிட்ட நவீன கருவிகள் உள்ளன.

வஜ்ரா வாகனம்

இதேபோல் காவல்துறை நிதியில் இருந்து போலீஸ் அதிகாரிகளுக்கு 10 புதிய ஜீப் பொருட்களை கொண்டு செல்வதற்காக ஒரு லாரி, 2 ஆம்புலன்ஸ் வாங்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் கோரிமேடு சைபர் கிரைம் போலீஸ் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களுக்கு பதிவு எண் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வாகனங்கள் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. இதன் மூலமாக புதுவை நகரில் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்று போலீசார் நம்பிக்கை தெரிவித்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டம், போராட்டங்களின்போது கைது செய்யவும், போலீஸ்காரர்கள் பாதுகாப்பு பணிக்கு அழைத்து செல்வதற்காகவும் 7 புதிய பஸ்கள் வாங்கப்பட உள்ளது. கூட்டத்தை கலைக்கவும், பாதுகாப்பு பணியில் ஈடுபடவும் வஜ்ரா, வருண் ஆகிய வாகனங்களும் புதிதாக வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக

இருசக்கர வாகனம் திருடிய வாலிபர் கைது

2 பைக்குகள் பறிமுதல்



புதுச்சேரி, மே 14: முத்தியால் பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிவபிரகாசம் மற்றும் கிழக்கு குற்ற பிரிவு உதவி சப்-இன்ஸ்பெக்டர் லஷ்மி நாராயணன், சுரேஷ், பெரியன்னசாமி, மற்றும் காவலர்கள் ஸ்ரீராம், சத்தியமூர்த்தி, சந்துரு மற்றும் முத்தியால் பேட்டை காவல் நிலைய குற்ற பிரிவினர் தேவா, பெரியசாமி ஆகியோர் முத்தியால்பேட்டை மகாத்மா காந்தி சாலை, சின்ன மணி கூண்டு சந்திப்பில் நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக மோட்டார் சைக்பதில் கூறியுள்ளார். பின்னர் அந்த நபர் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்தபோது அவர் விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் தாலுகா, ஆயந்தூர், புதுத்தெரு பகுதியை சேர்ந்த ஆமோஸ் பெர்ணான்டஸ், (26) என்பது தெரியவந்தது.

முத்தியால் பேட்டை காவல் நிலைய சரகத்தில் இரு சக்கர வாகனங்களை திருடியதை ஒப்புக்கொண்டார். மேலும் அவர் மீது தமிழ்நாடு காவல் நிலையங்களில் ஒரு கொலை வழக்கு 8 வழிப்பறி வழக்கு மற்றும் 4 இரு சக்கர வாகனம் திருட்டு வழக்கு நிலுவை

புதிய 3 குற்றவியல் சட்டங்கள் குறித்து ஆலோசனை கூட்டம்

காவல்துறை அதிகாரிகள் மீது வரும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது



புதுச்சேரியில் 3 புதிய குற்றவியல் சட்டங்களை செயல்படுத்துவது குறித்து மதிப்பிடுவதற்காக, காவல்துறை அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் மறுஆய்வுக்கூட்டம் நடந்தது.

அமைச்சர் நமச்சிவாயம் பேட்டி

புதுச்சேரி, ஜூன் 6: புதுச்சேரியில் 3 புதிய குற்றவியல் சட்டங்களை செயல்படுத்துவது குறித்து மதிப்பிடுவதற்காக, காவல்துறை அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் ஒரு மறுஆய்வுக்கூட்டம் நடத்தினார். இதில் டிஜிபி ஷாலினி சிங், ஐஜி அஜித் குமார் சிங்லா, சீனியர் எஸ்.பி. கலைவாணன், அனைத்து பிரிவு எஸ்பிக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் காவல்துறை, சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள், வழக்கு தொடர்தல் மற்றும் தடயவியல் சேவைகள் தொடர்பான முக்கிய விதிகளின் முன்னேற்றம் மற்றும் நிலை குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

மேலும், கைது செய்யப்பட்ட அனைத்து குற்றவாளிகளின் கைரேகைகளும் தேசிய தானியங்கி கைரேகை அடையாள அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். இதனால் தரவுத்தளத்தை சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். எந்தவொரு வழக்கிலும் சட்ட ஆலோசனை வழங்க, வழக்கு தொடரும் அதிகாரிக்கு மட்டுமே உரிமை இருக்க வேண்டும். மின்னணு சம்மன்கள், மின்னணு சாக்ஷ்யா, நியாய ஸ்ருதி மற்றும் தடயவியல் போன்ற விதிகள் விரைவில் முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று உள்துறை

இதனை தொடர்ந்து அமைச்சர் நமச்சிவாயம் நிருபர்களிடம் கூறியதாவது, கடந்த மாதம் 13ம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதிய 3 சட்டங்கள் சம்பந்தமாக புதுச்சேரி மாநிலத்தில் செயல்பாடுகள் சம்பந்தமாக கவர்னர், உள்துறை அமைச்சராகிய நான், தலைமை செயலர், சட்டத்துறை செயலர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அதன் அடிப்படையில் ஒவ்வொரு எப்ஐஆர் பதியும் போது அந்தந்த மாநில மொழியில் பதிய வேண்டும் என்று சொல்லி இருந்தார். ஒவ்வொரு வாரமும் புதிய சட்டங்கள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து டிஜிபி ஆய்வு செய்ய வேண்டும்.

அதன் பிறகு புதுச்சேரி உள்துறை அமைச்சர் 15 நாட்களுக்கு ஒரு முறையும், கவர்னர் மாதத்துக்கு ஒரு முறையும் புதிய குற்றவியல் சட்டங்கள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கூட்டம் நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் முதல் கூட்டம் இன்று (நேற்று) நடந்தது. இதில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் அறிவுறுத்தியப்

ளது என்பது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. எந்த காலக்கெடுவுக்குள் காவல்துறை செய்து முடிக்கப்படும் என்பதையும் இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மக்களுக்கு வெகு விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு, போதைப்பொருள், காவல்துறை சீர்த்திருத்தங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

காவல்துறை அதிகாரிகள் மீது வரும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தவளக்குப்பம் காவல் நிலைய அதிகாரி மீது விசாரணை நடத்தப்படுகிறது. விசாரணை முடிந்ததும் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் மன்றத்தில் நிறைய பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படுகிறது. சில பிரச்னைகள் சட்டத்திருத்தங்கள், வழக்கின் தன்மை குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லா பிரச்னைகளுக்கும் மக்கள் மன்றத்தில் தீர்வு காண முடியாது.

இனி வரும் காலங்களில் மக்கள் மன்றங்களில் வரும் புகார்கள் குறித்தும் ஆலோசனை செய்யப்படும். தொடர் வெடிகுண்டு மிரட்டல், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மெயில் மூலம் வருகிறது. மத்திய அரசின் உதவியை கேட்டுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அதற்கான தீர்வு விரைவில் கிடைக்கும் என்றார்.

ஜபோன்களை குறைந்த விலைக்கு விறபதாகக்கூறி

100க்கும் மேற்பட்டவர்களிடம் பல லட்சம் சூபாய் மோசடி



ஜபோன்களை குறைந்த விலைக்கு தருவதாக இன்ஸ்டாகிராமில் விளம்பரம் செய்து மோசடி செய்த புதுச்சேரி மற்றும் திருச்சியை சேர்ந்த 2 வாலிபர்களை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர். அடுத்தபடம் மோசடி பேர்வழிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட 4 செல்போன்கள், ரூ.1.30 லட்சம் பணம் மற்றும் லேப்டாப்.

புதுச்சேரி, திருச்சியை சேர்ந்த 2 பேர் கைது

புதுச்சேரி, மே 14: ஜபோன்களை குறைந்த விலைக்கு விறபதாக கூறி இன்ஸ்டாகிராமில் விளம்பரம் செய்து பல லட்ச ரூபாய் மோசடி செய்த புதுச்சேரி மற்றும் திருச்சியை சேர்ந்த 2 பேரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி கோரிமேடு பகுதியை சேர்ந்தவர் ரஞ்சித்துமார் இவர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இன்ஸ்டாகிராமில் ஜபோன் பெயர்கள் செல்போன் ரூ.1 ஆயிரத்துக்கு தருகிறோம் என்று பார்த்தவின் மயாதமாக நம்பி அவர்கள் கூறிய வங்கிக்கணக்கிற்கு 3 தவணைகளாக ரூ.1 ஆயிரத்தை அனுப்பியுள்ளார். ஆனால் ஒரு மாதத்திற்கு மேலாகியும் அவருக்கு ஜபோன் வரவில்லை. ஏன் ஜபோன் அனுப்பவில்லை என சம்பந்தப்பட்ட நபருக்கு ரஞ்சித்துமார் போன் செய்து கேட்டுள்ளார். அதற்கு அந்த நபர், மிகவும் தாக்குதலான வார்த்தைகளால் திட்டினார். முடிந்தால் என்னை தெருக்கியபார், நான் ரொம்ப பாதுகாப்பாக இருப்பேன் என்றும் சவால் விட்டுள்ளார்.

இது குறித்து ரஞ்சித்துமார், புதுச்சேரி சைபர் கிரைம் காவல் நிலைய தலைமையில் புகார் அளித்தார். சீனியர் எஸ்பி நாராயணன் உத்தரவின் பேரில் சைபர் கிரைம் எஸ்பி பாஸ்கரன் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர்கள் நிலாகரா ஜன், சீர்த்தி, எட்டுகள் மணிமொழி, விசோத ஆகியோர் தலைமையில் வாலிபர் வழக்கு

ஏமாந்தவர்களின் பட்டியல் நீள்கிறது

மோசடி பேர்வழிகள் 2 பேரும் புதுச்சேரி, தமிழ்நாட்டில் பல்வேறு பெயர்களில் வாட்ஸ்அப் குழுக்கள் ஏற்படுத்தி 100க்கும் மேற்பட்டோரை பதில் இணைந்து, இந்த மோசடி செயலில் ஈடுபட்டுள்ளனர். நேற்று விசாரணை நடத்த கொண்டிருந்தபோதே பகார்கள் வருவாயணம் இருந்தது. அதனால் சைபர் கிரைம் போலீசார் பதிவு செய்துள்ள மேற்பகுதியிடம் இன்ஸ்டாகிராம் ஒரு விளம்பரம் பார்த்து பணத்தை செலுத்தி வாரத்தவர்கள், புதுச்சேரி இணைய வழிகளை நிலைய தலைமையிடம் தொடர்பு கொள்ளலாம் என சீனியர் எஸ்பி நாராயணன் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறும்போது, இணைய வழியில் வரும் ஜந்த விலை குறைந்த பொருட்களையும் வாங்கி ஏமாற்றி வேண்டாம். இதுபோல் கடந்தாண்டு மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாக சைபர் கிரைம் காவல் நிலையத்திற்கு புகார்கள் புதிவாகியுள்ளது என்றார்.

பி.டெக் முடித்தவருக்கு 6 மொழிகளில் பேச தெரியும்

மோசடிக்கு திருச்சி சமூக தளைத்தான் ஆலோசனை தலைமையாக செயல்பட்டு வந்துள்ளார். அவருக்கு கூட்டாளியாக புதுச்சேரி மாநிலம் செயல்பட்டு வந்துள்ளார். இதில் மாநேஷ் பி.டெக் சமெக்ட்ரானிக்ஸ் இன்ஜினிய நிலை முடித்தவர். 6 மொழிகள் சரளமாக பேச தெரிந்தவர். தேக்காண்டோ விளையாட்டில் 3 தங்கப்பதக்கம் பெற்றவர். அவர் மீது போலீசார் வழக்கு ஏற்கனவே உள்ளது.

இதில், மேற்கண்ட துவது தெரியவந்தது. இன்ஸ்டாகிராம் பக்கம் மேற்படி நபர்களை பல்கதமாக புதுச்சேரியை வேறு இணைய வழி புகார்கள் பதிவாகியுள்ளது என்றார்.

செல்போன் கேட்டவர்களிடம் ஆபாசமாக பேசி மிரட்டல்

மேற்படி 2 மோசடி நபர்கள், பணம் செலுத்தி ஏமாந்தவர்களிடம் மிகவும் அநாவிகமாக ஏம்பி அருவருக்கத்தக்க வார்த்தைகளையும் பயன்படுத்தி திட்டி, உடனாம் முடிந்தால் என்னை தெரிப்பார், என்னை தெருக்கு முடியாது என்று சவால் விடுவது போன்ற வாய்ஸ் பெரிசாஜி அனுப்பி மிரட்டியுள்ளது. மேலும் இன்னை மீது இணைய வழி குற்றப்பிரிவு வலைத்தளமான நேஷனல் ஸ்ரீ கிரைம் நிலையத்தில் போலீசார் வேண்டுமென்றே 40 புகார்கள் பதிவாகியுள்ளது தெரியவந்துள்ளது.

போலீசார் கண்டுபிடித்தனர். இதையடுத்து நேற்று புதுச்சேரி வைத்திருப்பார்களை சேர்ந்த சதிர் அகமது (39) ஆகிய இருவரையும் நேற்றுகைது செய்தனர். விசாரணையில் அவர்கள் புதுச்சேரியிடம் மின்தி தமிழ்கத்தை சேர்ந்த மிக்கும் மேற்பட்ட நபர்களுக்கு இன்ஸ்டாகிராம் விடுவோமை அனுப்பி ஆபாசமாக வாய்ஸ் பேசி மிகவும் அருவருக்கும் இதன் வரை ஜபோன் அனுப்பாமல் ஏமாற்றி இருப்பது தெரியவந்தது. இதற்காக அவர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால் ரூ.1.30 லட்சத்துக்கும் மேற்பட்ட பணம் செலுத்தி ஏமாந்தவர்களை கடுமையாக வாய்ஸ் பேசி மிகவும் அருவருக்கும் வகையில் கலைக்குகளின் நடத்துள்ளதையும் போலீசார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து அவர்களிடம் இருந்து 4 செல்போன்கள், ரூ.1.30 லட்சம் பணம், லேப்டாப் ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினர். பின்னர் 2 பேரையும் நேற்று மாலை வாஜீன்றிரேட் முன்பு ஆஜர்படுத்தி காவலப்பட்டு மத்திய சிறையில் அடைத்தனர். மேலும், போலீசார் வழக்கு கடுமையாக கொடுத்து உதவிய அபர்களை தண்டிக்கவும் விசா

ரவுடிகளுக்கு 'குண்டாஸ்' போலீசாருக்கு ஐ.ஜி., உத்தரவு

புதுச்சேரி, மே 9-

ரவுடிகளை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க ஐ.ஜி., அஜித் குமார் சிங்களா போலீசாருக்கு உத்தரவிட்டார்.

புதுச்சேரியில் அண்மையில் பா.ஜ., பிரமுகர் உமாசங்கர் கொலை செய்யப்பட்டார். இது குறித்து பா.ஜ., எம்.எல்.ஏ.,க்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினர். இண்டியா கூட்டணி கட்சியினரும் மாநில [illegible] திக்கப்பட்டது.

பின், ஐ.ஜி., அஜித்குமார் சிங்களா பேசியதாவது:

புதுச்சேரியில் சட்ட ஒழுங்கு அமைதியாக இருக்க வேண்டும். அமைதிக்கு யாராவது குந்தகம் விளைவித்தாலும் கடும் நடவடிக்கை எடுக்க எந்த தயக்கமும் இருக்கக்கூடாது. ரவுடிகள் மீது புகார் வந்தால் சமரசம் என்ற பேச்சே இருக்க கூடாது. ரவுடிகள்



புதுச்சேரி சட்டம் ஒழுங்கு போலீசாரின் அவசர கூட்டம், போலீஸ் தலைமையகத்தில் ஐ.ஜி., அஜித் குமார் சிங்களா தலைமையில் நடந்தது. அருகில் டி.ஐ.ஜி., சத்திய சுந்தரம்.

தவளகுப்பத்தில்

டியூசன் மாணவர்களுக்கு கஞ்சா விற்ற 3 பேர் கைது

தவளக்குப்பம், மே. 13:

புதுச்சேரி, அரியாங்குப்பம் புறவழிச் சாலையில் உள்ள தனியார் டியூஷன் செண்டரில் படிக்கும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக அரியாங்குப்பம் காவல்துறைக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் எஸ்ஐ முருகானந்தம் தலைமையில் ஏஎஸ்ஐ சிரஞ்சீவி, தலைமை காவலர் வேல்முருகன் ஆகியோர் அப்பகுதிக்கு சென்று ரகசியமாக கண் காணித்தனர்.

அப்போது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த 3 பேரை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் புதுச்சேரி உப்பளம் அசோகன் விநியைச் சேர்ந்த மதி என்ற மதிவாணன் (30), வம்பா கீரப்பாளையம் நடுத்தெருவை சேர்ந்த சரவணன் (19), நோணாங்குப்பம் புதுகாலனியை சேர்ந்த ஈஸ்வரன் (20) என்பதும், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு கஞ்சா விற்றதும் தெரியவந்தது.



தவளகுப்பத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

இதுகுறித்து வழக்குப்பதிந்த காவல் துறையினர் 3 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

காவல்துறைக்கு ரூ.2½ கோடியில் 7 புதிய பஸ்கள்

புதுச்சேரி, மே.20-

புதுவை காவல்துறைக்கு ரூ.2½ கோடியில் 7 புதிய பஸ்கள் வாங்கப்பட்டுள்ளது.

புதுவை காவல்துறை

புதுவையில் சட்டம்-ஒழுங்கை பாதுகாக்க போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போது காவல்துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

இதே போல் காவல்துறை தற்போது நவீன மயமாக்கப்பட்டு வருகிறது. தற்போது காவல்துறையில் காலாவதியாகும் நிலையில் உள்ள வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வாங்கப்பட்டு



புதுவை காவல்துறைக்கு புதிதாக வாங்கப்பட்டுள்ள பஸ்களை படத்தில் காணலாம்.

திடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த பஸ்கள் வாகனப்பதிவு முடிந்த உடன் காவல்துறையிடம் ஒப்படைக்கப்படும்.

இதே போல் அடுத்த கட்டமாக குற்றவாளிகளை

கொண்டு செல்வதற்கா 3 நவீன வசதிகளுட கூடிய பாதுகாப்பு ப களும், காவல்துறை உ அதிகாரிகள் செல்வத காக ஒரு ஏசி பஸ்சும் உள்ளன

பயங்கர ஆயுதங்களுடன் பதுங்கியிருந்த 8 பேர் கும்பல் கைது



ஆயுதங்களுடன் பதுங்கியிருந்தாகக் கைது செய்யப்பட்ட 8 பேரையும் (மேலே அமர்ந்திருப்பவர்) அவர்களை பிடித்த போலீஸாரையும் படத்தில் காணலாம்.



பறிமுதல் செய்யப்பட்ட [illegible] கத்திகள், செல்போன்களை படத்தில் காணலாம்.

ரு.5.10 கோடி மோசடியில் 2.48 கோடி மீட்பு

புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் அதிரடி



புதுச்சேரியில் தனியார் நிறுவன மேலாளிடம் 5.10 கோடி ரூபாய் மோசடி வழக்கில், பறிமுதல் செய்யப்பட்ட 2.48 கோடி ரூபாய்க்கான காசோலையை அதிநிறுவன ஊழியர்களிடம் ஐ.ஜி., அஜித் குமார் சிங்களா வழங்கினார். அருகில் சீனியர் எஸ்.பி., நாரா தைதன்யா, எஸ்.பி., பாஸ்கரன், இன்ஸ்பெக்டர்கள் திலகராஜன், கீர்த்தி.



ராகேஷ்தீரா சக்தி நாயக் (36), பவரஜன் (30), ஓம்கார் நாத் (31) ஆகிய 3 பேரை போலீசார் தேடி வருகின்றனர்.

குழந்தை விற்பனை விவகாரத்தில்

மேலும் 2 பெண்கள் உள்பட 6 பேர் கைது

திருநன்னாறு, மே.19- குழந்தை விற்பனை விவகாரத்தில் மேலும் 2 பெண்கள் உள்பட 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

குழந்தை விற்பனை

காரைக்கால் மாவட்டம் கருக்கங்குடி பகுதியில் வசிப்பவர் லட்சுமி. இவரது மனுவுக்கு திருமணம் முடிந்து 10 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாத காரணத்தால் பிறந்து 30 நாட்கள் ஆன பச்சிளம் பெண் குழந்தையை பணம்கொடுத்து வாங்கினார்.



குழந்தை விற்பனை விவகாரத்தில் கைது செய்யப் பட்டவர்களை (நடுவில் நிற்பவர்கள்) படத்தில் காணலாம்.

இதுகுறித்து தகவலறிந்த போலீசார் லட்சுமி மற்றும் அவரது கணவர் அதே பகுதியைச் சேர்ந்த குழந்தைவாங்க உதவிய பெண் ஒருவர் ஆகியோரை செய்யப்பட்டு விசாரணை நடத்தது.

அப்போது அவர்கள் போலி பிறப்பு சான்றிதழ் தயார் செய்து கண்டுபிடிக்கப்பட்டு. உடந்தையாக இருந்த அரசு மருத்துவமனை ஊழியர் மற்றும் நகராட்சி ஊழியர் உள்பட குழந்தை விற்ற பெண் ஏஜெண்டு என 10 பேரை திருநன்னாறு போலீசார் கைது செய்தனர்.

தனிப்படை போலீசார் விசாரணை

இந்தநிலையில் அக்குழந்தையை பெற்ற தாய், குழந்தை எங்கு பிறந்தது என்பது குறித்து விசாரணை நடத்த மாவட்ட எஸ்பி சுபாரி போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா உத்தரவின் பேரில் 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. இந்த தனிப்படை போலீசார் தீவிர விசாரணை



பர்வீன்

வந்துள்ளார்.

இடைத்தரகர்களிடம் ஒப்படைப்பு

பின்னர் அந்த பெண்ணுக்கு சட்ட விரோதமாக தோடி பிரசவம் பார்த்துள்ளார். இதற்காக அவருக்கு ரூ.50 ஆயிரம் கொடுக்கப்பட்டுள்ளது. பின்னர் அந்த குழந்தையை ஜோதியிடம் சத்தியசீலன் ஒப்படைத்து விட்டு சென்று விட்டார்.

இதையடுத்து ஜோதி தனது மகன் ரமேஷ் மூலம் அந்த குழந்தையை அதே பகுதியை சேர்ந்த பாலகுருவிடம் ஒப்படைத்தார். பாலகுரு இடைத்தரகர்களாக கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையை சேர்ந்த பரிதா பேகம், பர்வீன், சொழ மூலம் சீர்காழியை சேர்ந்த மற்றொரு முகவரான சாராக்கனியிடம் ஒப்படைப்பட்டது. அவர் குழந்தையை சட்டவிரோதமாக தத்தெடுப்பதற்காக காரைக்கால் கருக்கங்குடியை சேர்ந்த லட்சுமி மற்றும் சதாசிவம் ஆகியோருக்கு கொடுத்தது தெரியவந்தது.

6 பேர் கைது

இதைத்தொடர்ந்து சத்தியசீலன், ஜோதி, ரமேஷ், பர்வீன், ரொஸ், பாலகுரு ஆகிய 6 பேரை கைது செய்தனர். மேலும் இந்த வழக்கில் தொடர்புடைய இடைத்தரகர்களான பரிதா பேகம், சாராக்கனி உள்ளிட்டோரை

தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட

நீர்மோர் பந்தலுக்கு தீ வைத்த 3 பேர் கைது

திருபுவனை, மே.17- தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலுக்கு தீ வைத்த 3 பேரை போலீசார் கைது செய்தனர்.



நீர் மோர் பந்தலுக்கு தீ வைத்ததாக கைது செய்யப்பட்ட 3 பேரையும் (கீழே அமர்ந்திருப்பவர்கள்) அவர்களை பிடித்த போலீசாரையும் படத்தில் காணலாம்.

நீர்மோர் பந்தலுக்கு தீ வைப்பு

மதகடிப்பட்டு 4 முனை சந்திப்பில் தி.மு.க. சார்பில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது. அதனை திறப்பதற்கு முன்பே மர்மநபர்கள் நீர் மோர் பந்தலுக்கு தீ வைத்தனர். இதையடுத்து நீர்மோர் பந்தலுக்கு தீவைத்தவர்களை கைது செய்யக் கோரி தி.மு.க.வினர் மதகடிப்பட்டு 4 முனை சந்திப்பில் மறியலில் ஈடுபட்டனர்.

இதுகுறித்த புகாரின்பேரில் திருபுவனை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். அதில் துப்பு துலங்கியது.

3 பேர் கைது

அதாவது நீர்மோர் பந்தலுக்கு எதிரே அதே பகுதியை சேர்ந்த நாகேந்திரராஜன் (வயது 58) என்பவர் டிபன் கடைநடத்திவருகிறார். அங்கு நீர்மோர் பந்தல் அமைத்தால் தனக்கு வியாபாரம் பாதிக்கப் படும் என எதிர்ப்பு தெரிவித் தார். இருப்பினும் அந்தஇடத் தில் நீர்மோர் பந்தல் அமைக் கப்பட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த நாகேந்திரராஜன், மதகடிப்பட்டு பகுதியை சேர்ந்தவிண்ணரசன் (37) கலி தீர்த்தாள்குப்பம் பகுதியை சேர்ந்தநாகராஜ் (43) ஆகியோருக்கு மதுகுடிக்க பணம் கொடுத்து நீர்மோர் பந்தலுக்கு தீ வைத்தது தெரியவந்தது. இதையடுத்து நாகேந்திராஜன் உள்பட 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



புதுவை காவல்துறைக்கு

ரூ.65 லட்சத்தில் நவீன தடயவியல் வாகனம்

கவர்னர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, மே.17- புதுவை காவல்துறைக்கு ரூ.65 லட்சம் செலவில் வாங்கப்பட்ட புதிய தடயவியல் வாகனத்தை கவர்னர் கைலாஷ்நாதன் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார்.

தடயவியல் வாகனம்

மத்திய அரசு கொண்டுவந்துள்ள 3 புதிய குற்றவியல் சட்டங்கள் புதுவையில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த புதிய குற்றவியல் சட்டங்களின் படி ஒரு குற்ற சம்பவத்தில் 7 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை வழங்கவழி இருந்தால் அந்த குற்ற சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு தடயவியல் வாகனம் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக புதுவை காவல் துறைக்கு மத்திய அரசு நிதி உதவியுடன் தற்போது ரூ.65 லட்சம் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய தடயவியல் வாகனம் வாங்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கநிகழ்ச்சி நேற்று மாலை கடற்கரை சாலையில் காந்தி திடல்

அருகில் நடந்தது.

கவர்னர் தொடங்கி வைத்தார்

நிகழ்ச்சியில் கவர்னர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டு தடயவியல் வாகன பயன்பாட்டை கொடியசைத்து தொடங்கி வைத்து காவல்துறைக்கு அர்ப்பணித்தார். தொடர்ந்து வாகனத்தில் இருந்த உயர் தொழில் நுட்ப தடயவியல் கருவிகளை கவர்னர் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் முதல்-அமைச்சர் ரங்கசாமி, அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமிநாராயணன், போலீஸ் டி.ஜி.பி. ஷாலினி சிங், அரசு செயலாளர் கேசவன், டி.ஐ.ஜி. சத்தியசுந்தரம் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

செய்முறை விளக்கம்

தொடர்ந்து புதிய குற்றவியல் சட்டங்களின் நடைமுறைப்படுத்தப்பட்டதால் நாய்களின் உதவியுடன் வெடிகுண்டு கண்டறிதல், மறைத்து வைக்கப்பட்டிருக்கும் போதைப்பொருளை கண்டறிதல் போன்ற செய்முறை விளக்கம் காட்டப்பட்டது.

தொடர்ந்து மோப்ப நாய்கள் போலீசாரின் ஆணைப்படி பல்வேறு செயல்களை செய்து காட்டின. இதனை பொதுமக்கள் பார்த்து ரசித்தனர்.

புதிய வாகனம் குறித்து தடயவியல் மையத்தின் இயக்குனர் அழகேசன் கூறுகையில், 'தற்போது புதுவை மாநிலத்தில் உள்ள தடயவியல் மையத்தில் 95 சதவீத பணிகள் நடைபெறுகிறது. ஒருசில ஆதுக்கு மட்டும் தராபார்க்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த வாகனத்தில் உள்ள நவீன தொழில்நுட்பம் மூலம் கொலை நடந்த இடத்தில் இடத்தை முழுமையாக கண்டறிந்து புதுச்சேரி தடயவியல் மையத்தில் இருந்தபடியே அதிகாரிகள் கலந்தாலோசனை செய்யலாம். அல்லது விஞ்ஞானிகளை நேரடியாக சென்று அனுப்பி வைக்கவும் முடியும்' என்றார்.

பல நூறு கோடி கிரிப்டோ கரன்சி மோசடியில்

5 மாநிலங்களில் தேடப்பட்ட முக்கிய குற்றவாளி அதிரடி கைது

- ரூ.1.5 கோடி சொகுசு கார் பறிமுதல்
- புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் நடவடிக்கை



பல நூறு கோடி கிரிப்டோ கரன்சி மோசடியில் கைது செய்யப்பட்ட குற்றவாளியிடம் புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் விசாரணை செய்தனர். அடுத்தபடம்: அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ரூ.1.5 கோடி சொகுசு கார்.

புதுச்சேரி, மே 18: பல நூறு கோடி ரூபாய் கிரிப்டோ கரன்சி மோசடியில் நாடு முழுவதும் தேடப்பட்ட முக்கிய குற்றவாளியான தொழிலதிபரை கோவையில் புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் நேற்று அதிரடியாக கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.1.5 கோடி சொகுசு காரை பறிமுதல் செய்துள்ளனர்.

புதுச்சேரி லாஸ்பேட்டை பகுதியை சேர்ந்த அசோகன் (63) ஓய்வுபெற்ற ராணுவ வீரர். இவரின் எல்.ஐ.சி முதலீட்டு பணத்தை பணி நிறைவுக்கு பின் திரும்ப ஓய்வு பெற்றவர். இவர், தனக்கு நெருங்கிய நண்பர் ஒருவர் மூலம் கிரிப்டோ கரன்சி மற்றும் ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்ய முடிவு செய்தார். அதன்படி, இணையதளம் வழியாக ஆப்பே என்ற கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்ற விளம்பரத்தை நம்பி அதில் ரூ.93 லட்சம் முதலீடு செய்துள்ளார்.

சிறிது நாட்களுக்குப் பிறகு அவரது கணக்கில் ரூ.9 கோடி இருப்பதாக காண்பித்துள்ளது. அந்த பணத்தை அவரால் எடுக்க முடியவில்லை. முதலீட்டு பணமும் கிடைக்கவில்லை. இதேபோல், தொடர்ந்து 8 பேர் மேற்கண்ட ஆப்பே கம்பெனியில் முதலீடு செய்து பணத்தை இழந்தனர். இதில் மொத்தம் ரூ.2.5 கோடிக்கு மோசடி நடந்துள்ளது. இதுகுறித்த புகாரின்பேரில் புதுச்சேரி சைபர் கிரைம் சீனியர் எஸ்.பி நாரா சைதன்யா, எஸ்.பி பாலகரன் ஆகியோரது அத்தரவின்பேரில் இன்ஸ்பெக்டர் ரிதி தலைமையிலான தனிப்படை போலீசார் கோவை மாநகர் பகுதியில் பதுங்கி இருந்த ஆப்பே நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரான தொழிலதிபர் பாபு (41) என்பவரை உள்ளூர் இன்ஸ்பெக்டர் அன்பரசு தலைமையிலான போலீசார் நேற்று காலை கைது செய்தனர். இதில் மேலும் ஒரு முக்கிய குற்றவாளியை தேடி வருகின்றனர்.

விசாரணையில் பாபு, ஆப்பே கம்பெனியை தொடங்கி, அதில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்று விளம்பரம் செய்து பொதுமக்களிடம் இருந்து பணத்தை வசூல் செய்து, ஒரே நாளில் கிரிப்டோ கரன்சியை மதிப்பில்லாமல் செய்துள்ளார். இந்தியா முழுவதும் ரூ.100 கோடிக்கு மேல் ஆப்பே என்ற கிரிப்டோ கரன்சியை உருவாக்கி,

PUDUCHERRY POLICE



QUARTERLY NEWSLETTER
APRIL - JUNE, 2025

police.py.gov.in

@ Puducherry Police

@ PondyTraffic

@ Puducherry Police @ PondyTraffic